# 6. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம்

வேளாண் விற்பனையை ஒழுங்குபடுத்தும் நோக்குடன், 1977ஆம் ஆண்டு முதல் தனித்துறையாக செயல்பட்டு வந்த வேளாண் விற்பனைத்துறை, வேளாண் விளைபொருட்கள் விற்பனையை முறைப்படுத்துவதோடு மட்டுமன்றி வேளாண் ஏற்றுமதி, அறுவடைக்குப்பின் பராமரிப்பு மற்றும் உணவு பதப்படுத்துதல் ஆகிய வேளாண் வணிக செயல்பாடுகளில் கவனம் செலுத்திட 2001ஆம் ஆண்டு முதல் "வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை" என பெயர் மாற்றம் செய்யப்பட்டு செயல்பட்டு வருகிறது. வியாபாரிகளிடமிருந்து ஒரு விழுக்காடு சந்தைக்கட்டணமாக வசூலிக்கப்பட்டு விற்பனைக்குழுக்களின் வரவினமாக பெற்று ஒழுங்குமுறை விற்பனைக்கூட வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் முக்கியச் செயல்பாடுகள்**

1. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் மூலம் வேளாண் விளைபொருட்களுக்கு உரிய விலை கிடைக்கவும், விவசாயிகள் பயன்பெறவும் வகை செய்தல்.
2. சந்தை உட்கட்டமைப்பு வசதிகள், விளைபொருள் குழுக்கள் மற்றும் விற்பனை ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் மூலம் வேளாண் விற்பனைக்கு உதவுதல்.
3. விவசாயிகள் தங்களது விளைபொருட்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலமாக தரம் பிரிப்பது, சேமிப்பது, மதிப்புக்கூட்டுவது மற்றும் பதப்படுத்துவது ஆகியவற்றினால் அடையும் பயன்களைப்பற்றி ஊடகங்கள் மூலம் விளம்பரம் செய்தல் மற்றும் விவசாயிகளுக்கு அதற்கான பயிற்சிகள் அளித்து அவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
4. வேளாண் விளைபொருட்கள், கால்நடைகள் மூலம் கிடைக்கும் உணவுப் பொருட்கள் மற்றும் வனப்பொருட்கள் ஆகியவற்றிற்கு 'அக்மார்க்' தர முத்திரை வழங்குதல்.
5. வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள் மூலம், ஏற்றுமதியை ஊக்குவிக்க ஏற்றுமதி செய்யும் வேளாண் விளைபொருட்களின் உற்பத்தி பரப்பினை அதிகரித்தல், அறுவடைக்குப்பின் செய்நேர்த்தி குறித்த விவரங்களை அளித்தல் மற்றும் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.
6. ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் நிலவும் சந்தை விலை நிலவரங்களை ஊடகங்கள் மற்றும் இணையதளம் மூலம் அன்றாடம் விவசாயிகள் அறிய விளம்பரம் செய்தல்.
7. உணவு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் நிறுவ ஊக்குவித்து, உற்பத்தி செய்யப்படும் உணவுப்பொருள் இழப்பை குறைக்கவும், வேலை வாய்ப்பைப் பெருக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளுதல்.
8. விவசாயிகள் மற்றும் நுகர்வோர் பயன்பெறும் வகையில் உழவர் சந்தைகளை செயல்படுத்துதல்.

**விற்பனைக்குழுக்களுக்கு வரும் வேளாண் விளைபொருட்களின் வரத்து மற்றும் வரவினம்**

2010–11ஆம் ஆண்டில் 16.89 இலட்சம் மெட்ரிக் டன் விளைபொருட்கள் விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு, அதன் மூலம் விற்பனைக்குழுக்களால் ரூ.72.27 கோடி சந்தைக் கட்டணம் வசூல் செய்யப்பட்டுள்ளது.

**பொருளீட்டுக் கடன்**

அறுவடை காலங்களில் ஏற்படும் விலை வீழ்ச்சியினால், சிறு மற்றும் குறு விவசாயிகள் குறைந்த விலையில் விளைபொருட்களை விற்பனை செய்வதை தவிர்க்க ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் பொருளீட்டுக்கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கிட்டங்கிகளில் 6 மாதம் வரை கட்டணம் ஏதுமின்றி இருப்பு வைக்கலாம். பொருளீட்டுக்கடனாக, அதிகபட்சமாக ரூ.1,00,000 வரை 5 விழுக்காடு வட்டி விகிதத்தில் ஒவ்வொரு விவசாயியும் பெறலாம். அதேபோன்று வியாபாரிகளுக்கும் பொருளீட்டுக்கடன் வசதி 9 விழுக்காடு வட்டி விகிதத்தில் செய்து தரப்பட்டுள்ளது. **2010–2011ஆம் நிதியாண்டில் 2817 விவசாயிகளுக்கு ரூ.2034.86 இலட்சமும், 134 வியாபாரிகளுக்கு ரூ.131.77 இலட்சமும் பொருளீட்டுக்கடனாக வழங்கப்பட்டுள்ளது.**

**கிராமங்களில் உலர்களங்கள் அமைத்தல்**

அறுவடைக்குப்பின், அதிக ஈரப்பதத்தால் தானியம் மற்றும் பருப்பு வகைகளின் மொத்த உற்பத்தியில் 5 முதல் 10 விழுக்காடு சேதமடைகிறது. அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்பை குறைக்கும் பொருட்டு விளைபொருட்கள் சரியான ஈரப்பதத்தில் சேமிக்கப்பட வேண்டும். இந்த இழப்பினைக் குறைக்கும் வகையில் கிராமங்களில் 1997ஆம் ஆண்டு முதல் உலர்களங்கள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. **விவசாயிகளுக்கு மிகவும் பயனளிக்கும் இத்திட்டத்தில் இதுவரை ரூ.26.09 கோடி செலவில் 1305 உலர்களங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன.**

**உழவர் சந்தைகள்**

விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகள் மற்றும் பழங்களுக்கு உரிய விலை கிடைக்கவும், இடைத்தரகர் குறுக்கீடின்றி அதனை நியாயமான விலையில் நுகர்வோர் வாங்கி பயன்பெறவும் உழவர் சந்தைகள் செயல்படுகின்றன. தற்போது தமிழகத்தில் 179 உழவர் சந்தைகள் இயங்கி வருகின்றன. விற்பனைக்குழு நிதியிலிருந்து உழவர் சந்தைகளின் செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. **2010–2011–ஆம் ஆண்டில் சராசரியாக நாள் ஒன்றுக்கு ரூ.3.85 கோடி மதிப்புள்ள 2428 மெட்ரிக் டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் 9760 விவசாயிகளால் கொண்டுவரப்பட்டு, 4.36 லட்சம் நுகர்வோர் பயன்பெற்றுள்ளனர். 25 உழவர் சந்தைகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டுள்ளன. 22 உழவர் சந்தைகளில் காய்கறிகள் மற்றும் பழங்களை பாதுகாக்க 2 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன அறைகள் ரூ.133.10 இலட்சத்தில் அமைக்கப்பட்டுள்ளது.**

**விற்பனை முனையங்கள் ஏற்படுத்துதல்**

நடுவண் அரசின் திருந்திய நெறிமுறைப்படி காய்கறிகள் மற்றும் பழங்கள் ஆகியவற்றை பதப்படுத்தி விற்பனை செய்திட அனைத்து வசதிகளுடன் கூடிய விற்பனை முனையங்கள் (Terminal Markets) சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மூன்று பெரு நகரங்களுக்கு அருகில் தனியார் மற்றும் பொதுத்துறை பங்கேற்கும் வகையில் ஏற்படுத்தப்பட உள்ளது. விற்பனை முனையங்கள் அமைக்கும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக கலந்தறிதற்குரியர் (Consultant) நிறுவனமாக இட்காட் (ITCOT) தேர்வு செய்யப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மண்டலம், ஈரோடு மாவட்டத்தில் விற்பனை முனையம் அமைப்பதற்காக 40 ஏக்கர் நிலம் பெருந்துறை சிப்காட் தொழிற்பேட்டையில் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 120.63 கோடியாகும். விற்பனை முனையம் அமைக்க திருவாளர். ஸ்பேக் டாபியோகா ப்ராடெக்ஸ் (இ) லிமிடெட், நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு அந்த நிறுவனம் கோரிய மானியத்தொகை ரூ. 28.99 கோடி மத்திய அரசால் இறுதி செய்யப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. விற்பனை முனையம் அமைக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சென்னையில் விற்பனை முனையம் அமைப்பதற்கு திருப்பெரும்புதுார் தாலுக்கா நாவலூர் கிராமத்தில் 33.00 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ. 113.85 கோடியாகும். தகுதி கோரும் விண்ணப்பங்கள் 4 தனியார் நிறுனங்களிடமிருந்து உலகளாவிய ஒப்பந்தபுள்ளி மூலம் பெறப்பட்டுள்ளது. இதேபோல் மதுரையில் விற்பனை முனையம் அமைப்பதற்கு முக்கம்பட்டியில் 35 ஏக்கரும், திருவாதவூரில் 15 ஏக்கரும், ஆக மொத்தம் 50 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டுத் தொகை ரூ.105.05 கோடியாகும். தகுதி கோரும் விண்ணப்பங்கள் 3 தனியார் நிறுனங்களிடமிருந்து உலகளாவிய ஒப்பந்தபுள்ளி மூலம் பெறப்பட்டுள்ளது, மேற்கண்ட இரு விற்பனை முனையங்களுக்குமான தகுதி கோரும் விண்ணப்பங்கள் இட்காட் நிறுவனத்தினால் மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகிறது.

**வேளாண் ஏற்றுமதி மண்டலங்கள்**

தமிழகத்தில் கொய்மலர்கள், மலர்கள், மாங்கனி மற்றும் முந்திரிக்கென ஏற்றுமதி மண்டலங்கள் தனியார் உதவியுடன் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டு, இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் நடுவண் அரசு நிறுவனமான வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப்பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு முகமை (APEDA) மற்றும் தனியார் தொழில் முனைவோர்களிடையே மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில் ரூ.24.85 கோடி மதிப்பீட்டில் டிட்கோ நிறுவனமும், தனியார் நிறுவனமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள திருவாளர். டான்ஃப்ளோரா என்ற கூட்டு நிறுவனத்தால் கொய்மலர்களுக்கென ஏற்றுமதி மண்டலம் உருவாக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் மலர்களுக்கென ரூ.15.89 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் திருவாளர். நீல்ஃப்ளோரா என்ற தனியார் நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டையில் ரூ.21.00 கோடி மதிப்பீட்டில் மாங்கனிக்கென திருவாளர். மாக்கிரீட்டா எக்ஸ்போர்ட் லிமிடெட் நிறுவனத்தால் வேளாண் ஏற்றுமதி மண்டலம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதுபோலவே முந்திரிக்கென கடலூர் மாவட்டம் பண்ருட்டியில் ரூ. 16.54 கோடி மதிப்பீட்டில் வேளாண் ஏற்றுமதி மண்டலம் திருவாளர். சத்துவா அக்ரோ எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்கண்ட 4 வேளாண் ஏற்றுமதி மண்டலங்களிலும் நவீன நாற்றங்கால், பதப்படுத்துதல் மற்றும் சேமிப்பு வசதிகள் கொண்ட உட்கட்டமைப்புகள் தனியார் நிறுவனங்களால் ஏற்படுத்தப்பட்டு, வணிக ரீதியிலான உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளது. 2010–2011ஆம் நிதியாண்டில், திருவாளர். டான்ஃப்ளோரா மூலம் ரூ. 3.20 கோடி மதிப்புள்ள கொய்மலர்கள், திருவாளர். நீல்ஃப்ளோரோ மூலம் ரூ. 1.60 கோடி மதிப்புள்ள மலர்கள், திருவாளர். மாக்கிரீட்டா எக்ஸ்போர்ட் மூலம் ரூ. 1.56 கோடி மதிப்புள்ள மாங்கனி மற்றும் மாங்கனிகூழ் திருவாளர். சத்துவா அக்ரோ எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனம் மூலம் ரூ. 1.03 கோடி மதிப்புள்ள முந்திரி வர்த்தகம் செய்யப்பட்டுள்ளது.

**மலர் ஏல மையம்**

மலர் உற்பத்தியாளர்களின் நலனுக்கென திருநெல்வேலி மாவட்டம், காவல்கிணறில் ரூ.163.40 இலட்சம் செலவில் மலர் ஏல மையம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. 2010–2011ஆம் ஆண்டில் சராசரியாக நாளொன்றிற்கு ரூ. 83256 மதிப்புள்ள 753 கிலோ மலர்கள் 64 விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள்**

சிறு மற்றும் குறு விவசாயிகளின் நலனுக்காக கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரியில் மாங்கனிக்கும், கோயம்புத்தூர் மாவட்டம் பொங்கலூரில் வெங்காயத்திற்கும், தேனி மாவட்டம் ஓடைப்பட்டியில் திராட்சைக்கும், தருமபுரி மாவட்டம், பாலக்கோட்டில் தக்காளிக்கும் குளிர்பதன வசதியுடன் கூடிய வணிக வளாகங்கள் தலா ரூ.1 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. தரம்பிரிக்கும் மற்றும் சிப்பம் கட்டும் அறை, மின்னணு எடைக்கருவிகள், இடுபொருள் கடைகள், வணிகர்களுக்கான கடைகள் மற்றும் 50 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன வசதி ஆகிய உட்கட்டமைப்பு வசதிகள் இவ்வணிக வளாகங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தென்னை விவசாயிகள் பயன்பெறும் வகையில் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டையில் பொன்னவராயன்கோட்டை உக்கடை கிராமத்தில் தென்னை வணிக வளாகம் ரூ.4 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. பரிவர்த்தனைக்கூடம், சேமிப்புக்கிட்டங்கி, உலர்களம், சூரிய ஒளி கொப்பரை உலர்விப்பான், தரம்பிரித்தல் மற்றும் வகைப்படுத்துதல் கூடம், இடு பொருள் கடைகள், மின்னணு எடைக்கருவி மற்றும் தானியங்கி சிப்பம் கட்டும் வசதியுடன் கூடிய எண்ணெய் பிழிந்து எடுக்கும் ஆலை போன்ற வசதிகள் இவ்வணிக வளாகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**அக்மார்க் தரம் பிரித்தல்**

“அக்மார்க்” என்பது உணவுப்பண்டங்களின் தரத்திற்கு அளிக்கப்படும் முத்திரையாகும். இத்திட்டத்தின் மூலமாக நுகர்வோருக்குத் தரமான, கலப்படமற்ற உணவுப் பொருட்களை கிடைக்க செய்வதற்கு தமிழ்நாட்டில் 30 மாநில அக்மார்க் ஆய்வகங்களும், சென்னையில் ஒரு முதன்மை ஆய்வகமும் செயல்பட்டு வருகின்றன. அக்மார்க் தரம்பிரிப்பின் கீழ் மத்திய தொகுப்பிற்கு உட்பட்ட உணவுப்பண்டங்கள் மற்றும் மத்திய தொகுப்பிற்கு உட்படாத உணவுப்பண்டங்களுக்கு தரம் பிரிக்கும் பணி மேற்கொள்ளப்படுகிறது. சான்றிதழ் பெற்ற சிப்பம் கட்டுவோருக்கு உணவுப்பண்டங்களின் தரம் மற்றும் தன்மை அடிப்படையிலான “அக்மார்க்” முத்திரைச்சீட்டுகள் ஆய்வகத்தில் பணிபுரியும் பணியாளர்களின் மேற்பார்வையில் வழங்கப்படுகின்றன. **2010–2011ம் ஆண்டில், 13.71 இலட்சம் குவிண்டால் உணவுப் பண்டங்கள் அக்மார்க் தரம் பிரிப்பு ஆய்வகங்களால் தரம்பிரிக்கப்பட்டன.**

**தமிழ்நாடு நீர்வள நிலவளத் திட்டம்**

நீர்வள நிலவளத் திட்டம் உலக வங்கியின் நிதியுதவியுடன் தமிழ்நாட்டில் உள்ள 60 பாசனப்பகுதிகளில் 2007–08 முதல் 2012–13 வரை 6 ஆண்டுகளில் ரூ.24.84 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2010–2011ஆம் நிதியாண்டு வரை மூன்று கட்ட பாசனப்பகுதிகளிலும் மொத்தம் ரூ.24.39 கோடி செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டி இருப்பு வைத்து நல்ல விலைக்கு விற்பனை செய்வதற்கு சந்தை உட்கட்டமைப்பு வசதிகள் இன்றியமையாதது என்பதை கருத்தில் கொண்டு, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை உலக வங்கியின் வழிகாட்டுதல்களின்படி, இதுவரை 19 வேளாண் வணிக மையங்கள், 87 சேமிப்பு கிட்டங்கிகள், 138 உலர் களங்கள், 13 சேகரிப்பு மையங்கள், ஒரு சிப்பம் கட்டும் அறை ஆக மொத்தம் 258 கட்டுமான பணிகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. வேளாண் உபகரணங்களான, 52 ஈரப்பதமானிகள், 118 மின்னணு எடை கருவிகள், 522 தார்பாலின்கள், 1985 அட்டகங்கள், 19 இணைய வசதியுடனான கணினிகள், 575 பிளாஸ்டிக் கிரேட்கள், 8 சரக்கு ஆட்டோக்கள் மற்றும் ஒரு மினி லாரி ஆகிய தளவாட வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வேளாண் விளைபொருள் குழுக்களைச் சார்ந்த விவசாயிகள் பயன்பாட்டில் உள்ளது. இதன் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களுக்கு கூடுதல் வருவாய் பெற்று வருகின்றனர்.

விவசாயிகள் – வியாபாரிகள் கூட்டுபணிமனையானது விவசாயிகள் லாபகரமான நேரடி விற்பனைக்கு அடித்தளமாக அமைந்துள்ளது. பாசனப்பகுதி விவசாயிகள் கூடுதல் வருமானம் ஈட்டிட, அவர்களிடையே விளைபொருள் குழு அமைப்பை ஏற்படுத்தி வியாபாரிகளுக்கும் விளைபொருள் குழு விவசாயிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமாக விற்பனை ஒருங்கிணைப்பு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 14 முக்கிய விளைபொருள்களின் கீழ் 1108 விளைபொருள் குழுக்கள் பாசனப்பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டு, 677 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு விவசாயிகளுக்கு கூடுதல் வருமானம் கிடைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. பாசனப்பகுதி விவசாயிகளுக்கு தகவல் மற்றும் பயிற்சி திட்டத்தின்கீழ் இதுவரை 670 பயிற்சிகள் முறையே 218 அறுவடை பின்செய் நேர்த்தி தொழில்நுட்ப பயிற்சி, 186 உற்பத்தியாளர்– வியாபாரிகளின் கூட்டுப் பணிமனை, 266 பட்டறிவுப் பயணம் (மாநிலத்தின் உள்ளே 169 மற்றும் மாநிலத்தின் வெளியே 97) போன்ற பல்வேறு பயிற்சிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

மூன்றாம் மற்றும் நான்காம் கட்டமாக நீர்வள நிலவளத்திட்டத்தின் கீழ் ரூ.459.28 இலட்சம் செலவில் 2011–2012ஆம் நிதியாண்டில் நெல், மக்காச்சோளம், மிளகாய், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்து பயிர்களுக்காக சேகரிப்பு மையங்கள், சேமிப்பு கிட்டங்கிகள், உலர்களங்கள் மற்றும் டன்னேஜ்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட உள்ளன. மேற்கண்ட உட்கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி கூடுதல் வருமானம் பெற்றிட விளைப்பொருள் குழு விவசாயிகளுக்கும் வியாபாரிகளுக்கும் இடையே விற்பனை ஒருங்கிணைப்பு மற்றும் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட உள்ளது.

**தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம்**

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டமானது வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையின் கீழ் உள்ள உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த உதவுகிறது. 2010–2011ஆம் ஆண்டில் ரூ.675.60 இலட்சம் செலவில் புதிதாக 25 உழவர் சந்தைகள் துவங்கப்பட்டதுடன் ஏற்கெனவே இயங்கி வரும் உழவர் சந்தைகளை மேம்படுத்தி கணினி வசதிகள் செய்யப்பட்டுள்ளது.

2010–2011 ஆம் ஆண்டில் 20 ஊரக கிட்டங்கிகள், 150 உலர்களங்கள் ரூ.770 இலட்சம் செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை விலை வீழ்ச்சி ஏற்படும் காலங்களில் சேமிக்கவும், பொருளீட்டுக்கடன் வசதி பெறவும், அறுவடைக்குப்பின் ஏற்படும் இழப்புகளை தவிர்க்கவும் உதவுகிறது. வேளாண் விளைபொருட்களை சரியான எடையில் விரைவில் விற்பனை செய்வதற்கு தானியங்கி எடையிடும் மற்றும் மூட்டையிடும் கருவிகள் இரு ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ரூ.11.25 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. 4 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் ரூ.163.10 இலட்சம் செலவில் தரம்பிரித்தல் மற்றும் வகைப்படுத்தும் அறை, விவரங்கள் சேகரிக்கும் கையடக்க கருவி, மின்னணு காட்சிப் பலகை போன்றவை ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இதன்மூலம் விவசாயிகள் நவீன தொழில் நுட்பம், விலை விவரம் மற்றும் ஏற்றுமதி வாய்ப்பு போன்றவை பற்றி அறியலாம்.

சேலம் மாவட்டம், மேச்சேரியில் தக்காளிக்கென 100 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2010–2011 ஆம் ஆண்டில் திருப்பூர் மாவட்டம், பெதப்பம்பட்டியில் தென்னைக்கென ரூ.100 இலட்சம் மதிப்பீட்டில் வணிக வளாகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வணிக வளாகத்தில் 3000 மெ.டன் கொள்ளளவு கொண்ட ஊரக கிட்டங்கி, பரிவர்த்தனைக்கூடம், கொப்பரை உலர்த்தும் கருவி, தேங்காய் நார் எடுக்கும் இயந்திரம், கொப்பரை வெட்டி, மரம் ஏறும் கருவி போன்ற வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

இது தவிர திருச்சிராப்பள்ளி, மோகனூர், ஸ்ரீவைகுண்டம் மற்றும் சின்னமனூரில் ரூ. 200 இலட்சம் மதிப்பில் வாழை பழுக்கவைக்கும் கூடம், மலைக்காய்கறிகளுக்கென ரூ.100 இலட்சம் மதிப்பில் கோயம்புத்தூர் மாவட்டம் காரமடை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் குளிர்பதன கிட்டங்கியுடன் கூடிய வணிக வளாகம், இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் ரூ.99.50 இலட்சம் மதிப்பில் மிளகாய்க்கென குளிர்பதன கிட்டங்கி, பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.114.90 இலட்சம் மதிப்பில் வெங்காயம் மற்றும் இதர காய்கறிகளுக்கு சேமிப்பு வசதியுடன் கூடிய வணிக வளாகம் மற்றும் மதுரை மாட்டுத்தாவணி நெல் வணிக வளாகத்தில் ரூ.36 இலட்சம் மதிப்பில் கூடுதல் கடைகள் அமைக்கப்பட்டு வருகிறது.

**தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு.**

தமிழகத்தில் சிறு விவசாயிகள் பயன்பெறும் வகையில் தொழில் நுட்பங்கள் மற்றும் மதிப்புக்கூட்டுதல் முறைகளை கடைபிடிக்கச் செய்வதன்மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உறுதி செய்யப்பட்ட கொள்முதல் மற்றும் கூடுதல் விலையும் கிடைக்க அவர்களை ஈடுபடுத்தி செயல்படுவதே, தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பின் நோக்கமாகும். இவ்வமைப்பு அரசு, தனியார் துறை, கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சேவை நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது. இத்திட்டமானது, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உடன் இணைந்து செயல்படுத்தப்படுகிறது. தொழில் தொடங்க மூலதன முதலீட்டுத்தொகை மற்றும் திட்ட மேம்பாட்டு வசதிகள் வழங்குவதன் மூலமாக தமிழகத்தில் வேளாண் வணிகம் மேம்பட இவ்வமைப்பு உதவுகிறது. இத்திட்டத்தின் கீழ் 37 வேளாண் வணிக நிறுவனங்களுக்கு தொழில் தொடங்குவதற்கான மூலதன முதலீட்டுத் தொகையாக ரூ.1326.36 இலட்சம் தமிழ்நாடு சிறு விவசாயிகள் வேளாண் வணிக நட்பமைப்பு மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.